**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.100/2021**

**2026 ஆம்** வருடம் ஜனவரி மாதம் 20 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப்ஜான் பிரிட்டோ | ஜாதி | : | |
| த.பெ | : | மரியசூசை | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2026 |
| தேதி | : | 20.01.2026 | | | |

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுடைய பாட்டனார் பெயர் மாங்குடி இருதயம் என்றால் சரிதான். அவர் 1958 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரும், அவருடைய வாரிசுகள் அனைவரும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன இருதயத்திற்கு அந்தோணி, சந்தியாகு அம்மாள், மரியபுஷ்பம், ஜெர்மன், உங்கள் தகப்பனார் மரியசூசை ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். தவா சொத்துகள் அனைத்தும் மேற்சொன்ன இருதயத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இருதயம் உயில்சாசனமோ, தான சாசனமோ எழுதி வைக்காமல் தான் இறந்தார் என்றால் சரிதான். இருதயத்திற்கு கிறிஸ்தவ முறைப்படி மேற்சொன்ன 5 நபர்களும், உங்கள் அப்பத்தா சேசலியம்மாள் ஆகியோர் மட்டும் தான் வாரிசுகள் என்றால் சரிதான்.

1 முதல் 8 பிரதிவாதிகள் அந்தோணியின் வாரிசுகள் என்றால் சரிதான். 9வது பிரதிவாதி இறந்துபோன உங்கள் தாயார் என்றால் சரிதான். 10 ஆம் பிரதிவாதி உங்களுடைய சகோதரி என்றால் சரிதான். உங்கள் அப்பா 1969 ல் இறந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கின் 12 ஆம் பிரதிவாதியான மரியபுஷ்பம் இறந்துவிட்டதால், 19 முதல் 23 பிரதிவாதிகள் அவரது வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால்

சரிதான். 1 ஆம் பிரதிவாதி சம்மனசு இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளாக 18, 19 பிரதிவாதிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

1 ஆம் பிரதிவாதி சம்மனசுக்கு வாதியும் வாரிசு ஆவார் என்றால் சரிதான். 13 ஆம் பிரதிவாதி இறந்துபோன சந்தியாகுஅம்மாளின் வாரிசு என்றால் சரிதான். சந்தியாகுஅம்மாள் சிறுமலை அடிவாரத்தில் இடம் வாங்கி அங்கேயே வசித்து வந்தார் என்றால் சரியல்ல, பஞ்சம்பட்டியில் தான் சந்தியாகுஅம்மாள் இருந்து இறந்தார். அவருடைய மகன் தான் சிறுமலை அடிவாரத்தில் குடியிருந்து வருகிறார். உங்கள் தந்தை இறந்து 40 வது நாள் காரியம் முடித்து ஒரு ஊர் பஞ்சாயத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மரியபுஷ்பம், சந்தியாகுஅம்மாள் ஆகியோர் சொத்துக்கள் சம்மந்தமாக எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor